சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No.155/2019

2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு. தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திருமதி. ரங்கநாயகி<br>த/பெ. | நாள் 14.8.2024 |
| வயது. | தொழில் |
| கிராமம். | வட்டம். |

**<u>மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1. நான் மனுவில் மனுதாரர். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது.அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். விபத்து சம்மந்தமான முதல் தகவல் அறிக்கை நகல் **ம.த.சா.ஆ. 1** . விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் மற்றும் காப்பீட்டுச் சான்றிதழ் மற்றும் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை நகல்கள் ம.த.சா.ஆ.2 முதல் ம.த.சா.ஆ.4. பார்வதி மருத்துவமனையில் எனக்கு வழங்கிய விடுவிப்பு சான்று ம.த.சா.ஆ.5. என்னுடைய ஆதார் அட்டை நகல் ம.த.சா.ஆ.6. என்னுடைய வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல் ம.த.சா.ஆ.7. பார்வதி மருததுவமனையில் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ செலவீன ரசீதுகள் (50 எண்ணிக்கை) ம.த.சா–ஆ.8. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சாலையைக் கடக்கும்போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். அதனால் 2ம் எதிர்மனுதாரர் எவ்வித நஷ்ட ஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை என்றால் சரிதான் நான் நஷ்ட ஈடு அதிகப்படுத்தி கேட்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.